Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

புஷ்பதந்தர் இயற்றிய

சிவமஹிம்னஸ் ஸ்தோத்ரம்



அன்பளிப்புப் பிரசுரம் :

சசி & சேகர்

கியர் டிரைவ்ஸ் லிமிடெட்

378, ஆற்காட் ரோடு, சென்னை - 600 024.

விலை : நித்யபாராயணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓ

சிவமயம்

புஷ்பதந்தர் பாடிய

சிவமஹிம்னஸ் ஸ்தோத்ரம்

தமிழ் பொழிப்புரையுடன் கூடியது

அன்பளிப்புப் பிரசுரம் :

சசி & சேகர்

கியர் டிரைவ்ஸ் லிமிடெட்

378, ஆற்காட் ரோடு, சென்னை-600 024.

விலை : நித்யபாராயணம்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸமர்ப்பணம்

புஷ்பதந்தர் பாடிய இந்த அதியற்புதமான சிவமஹிம்னஸ் ஸ்தோத்திரத்தைப் படிக்கும்படி கனவில் கட்டளையிட்டு என்னை ஆட்கொண்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்த்ர சேகரரேந்த்ர ஸரஸ்வதி சுவாமிகளின் திவ்ய திருவடித் தாமரைகளில் இந்தப் புத்தக மலரை ஸமர்ப்பணம் செய்கிறேன்.

T. R. கிருஷ்ணமூர்த்தி ஐயர்

Nathan Printing Press, Madras-4. Phone: 71900

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஓ

சிவமயம்

பிரசுரகர்த்தர் பணிவுரை

1977-ம் ஆண்டு டிஸம்பர் மாதம் 14-ம் தேதி புதன் கிழமை இரவு அல்லது 15-ம் தேதி வியாழன் விடியற்காலை என்று வைத்துக் கொள்ளலாம். சுமார் மூன்று மணி இருக்கலாம் மிகவும் வியக்கத்தக்கதொரு ஸ்வப்பனம். நான் காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசத்சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி சுவாமிகளுடன் உரையாடிக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கும் எனக்கும் இடையில்ஒரு ஹோமகுண்டம் பஸ்மம் நிறைந்து இருந்தது. அதன் அருகில் ஜகத்குரு அவர்கள் முட்டியிட்டவண்ணம் அமர்ந்து ஹோமகுண்டத்துக்குள் கையை ஆழமாக விட்டுத் துழாவினர்கள். "டேய், சிவனை ஆழ அமுக்கி வைத்துட்டாடா" என்று கூறிக் கொண்டே அதிலிருந்து ஒரு கல்லை எடுத்தார்கள். அதன் நடுவில் சுற்றிலும் ஒரு கோடு தெரிந்தது. "பார்த்தாயா! இந்த அளவில் தானே இருக்கவேண்டும்?" என்று சொல்லிக் கொண்டே என்னைப் பார்த்து ஆள் காட்டி விரலால் சுட்டிக்காட்டி 'டேய், நீ சிவமஹிம்னஸ் ஸ்தோத்ரம் படிடா" என்று அன்புக் கட்டளையிட்டருளினர்கள். உடனே நான் விழித்துக் கொண்டேன். பிறகு ஜகத்குருவை மனதால் வணங்கி மறுபடியும் தூங்கிவிட்டேன்.

இம்மாதிரி ஒரு ஸ்தோத்ர புத்தகம் இருப்பது எனக்கு அப்பொழுதுதான் தெரியும் மறுநாளே தேடியலைந்து மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் வாங்கி அன்று முதல் தினசரி பாராயணம் செய்து கொண்டிருக்கிறேன். அது முதல் மிக்க மனநிம்மதியுடன் இருக்கிறேன். இந்த அரிய துதி நூலை மேல மாம்பலம் ஸ்ரீ சங்கர ஜயந்தி மலரில் 1976-ம் ஆண்டு வெளியிட்டிருந்தது பின்னரே அறிந்து கொண்டேன்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V. Hariharan Collection, Sholinganallur, Chennai

இதனைப் படித்து நான் மிக்க மகிழ்ச்சியும் இன்பமும், அடைந்ததால் எல்லோரும் படித்து பயனடைய வேண்டும் என்று ஆசை கொண்டேன். சில பிரதிகளை விலைக்கு வாங்கிச் சில அன்பர்களுக்குக் கொடுத்தேன். அதைவிட நாமே அச்சிட்டால் ஆயிரக்கணக்கான பிரதிகளை அன்பர் களுக்கு வழங்கமுடியுமே என்ற எண்ணத்தினால் இதை இப் பொழுது அச்சிட்டு வழங்குகிறேன். அன்பர்கள் இதனைப் பெற்றுத் தினசரி பாராயணம் செய்து சிவபிரானது திருவருளைப்பெற்றுச் சகல சிரேயஸ்களையும் அடைய வேண்டுமாய் பரமேச்வரனையும், பரமேச்வராவதாரமான ஜகத்குருவையும் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

சென்னை-24
1—6—87

T. R. கிருஷ்ணமூர்த்தி ஐயர்
சேர்மன்-மானேஜிங் டைரக்டர்
சசி சேகர் கியர் டிரைவ்ஸ் லிமிடெட்

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

—திருநாவுக்கரசு சுவாமிகள்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ புஷ்பதந்தர் பாடிய

சிவமஹிம்நः ஸ்தோத்ரம்

।। शिवमहिम्नः स्तोत्रम् ।।

महिम्नः पारं ते परमविदुषो यद्यसदृशी
स्तुतिर्ब्रह्मादीनामपि तदवसन्नास्त्वयि गिरः ।
अथा वाच्यस्सर्वः स्वमतिपरिणामावधि गृणन्
ममाप्येष स्तोत्रे हर निरपवादः परिकरः ।। १ ।।

மஹிம்நः பாரம் தே பரமவிதுஷோ யத்யஸத்ருசீ
ஸ்துதிர்ப்ரம்மாதீநாமபி ததவஸந்நாஸ்த்வயி கிரः ।
அதாவாச்யஸ்ஸர்வः ஸ்வமதிபரிணாமாவது க்ருணந்
மமாப்யேஷ ஸ்தோத்ரே ஹரநிரபவாதः பரிகரः ।। 1 ।।

1. பரமேச்வரனே! உனது மகத்துவத்தின் ச்ரேஷ்டமான எல்லையை அறியாதவன் உன்னைத் தோத்திரம் செய்வது சரியல்ல என்றால் பிரம்மாதி தேவர்கள் உன்னைப் பற்றிச் செய்கின்ற தோத்திரங்களும்கூட அவ்விதமே

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

போதுமானவை அல்லவாகும். அவரவரது புத்தி சக்தியை அனுசரித்து உன்னைத் துதிப்பவர்களெல்லாம் குற்றமற்றவர்கள் என்றால் உன் விஷயத்தில் தோத்திரம் செய்யும் என்னுடைய இந்த முயற்சியும் தோஷமுடையது அல்ல.

अतीतः पन्थानं तव च महिमा वाङ्मनसयो-
रतद्व्यावृत्त्या यं चकितमभिधत्ते श्रुतिरपि ।
स कस्य स्तोतव्यः कतिविधगुणः कस्य विषयः
पदे त्वर्वाचीने पतति न मनः कस्य न वचः ॥ २ ॥

அதீதः பந்தாநம் தவ ச மஹிமா வாங்மநஸயோ:
அதத்வ்யாவ்ருத்த்யா யம் சகிதமபிதத்தே ச்ருதிரபி ।
ஸ கஸ்ய ஸ்தோதவ்ய: கதிவிதகுண: கஸ்ய விஷய:
பதே த்வர்வாசீநே பததி ந மன: கஸ்ய ந வச: ॥ 2 ॥

2. பரமசிவனே! எவரை வேதமும் பயத்துடன் இதுவல்ல, இதுவல்ல (நேதி, நேதி) என்ற முறையில் சொல்லுகின்றதோ, அத்தகைய உனது பெருமை வார்த்தைகளுக்கும் மனதிற்கும் எட்டாதவையாகும். அனந்தமான குணங்கள் உள்ளதும் ஒன்றாலும் அறிய முடியாததுமான உன்னுடைய அந்த மகிமையை எவரால் ஸ்தோத்ரம் செய்யமுடியும்? எனினும் பிறகு நீயே உருவமெடுக்கும் போது எவரது மனமும் வாக்கும் தான் அதனைத் துதிப்பதில் ஈடுபடாது?

मधुस्फीता वाचः परममृतं निर्मितवतः
तव ब्रह्मन् किं वागपि सुरगुरोर्विस्मयपदम् ।
मम त्वेतां वाणीं गुण कथनपुण्येन भवतः
पुनामोत्यर्थेऽस्मिन् पुरमथन बुद्धिर्व्यवसिता ॥ ३ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

மதுஸ்பீதா வாசः பரமமம்ருதம் நிர்மிதவதः
தவப்ரம்மந் கிம் வாகபி ஸுரகுரோர்விஸ்மயபதம் ।
மம த்வேதாம் வாணீம் குண கதநபுண்யேந பவதः
புநாமீத்யர்த்தே (அ) ஸ்மிந் புரமதந புத்திர்வ்ய-
வஸிதா ॥ 3 ॥

3. பிரம்மஸ்வரூபமான பரமேச்வரனே! முப்புரம் எரித்தவனே! தேன் போன்று இனிமையானவையும், மேலான அம்ருதம் போன்றவையுமான வேதங்களை அருளிச் செய்த உமக்கு தேவகுருவான பிரஹஸ்பதியுடைய தோத்திரங்களும் கூட ஆச்சர்யத்தை விளைவிக்குமா என்ன? அப்படியிருந்தும், உமது குணங்களை வர்ணிக்கும் புண்ணியத்தால் எனது வாக்கினைப் புனிதப் படுத்திக் கொள்கிறேன் என்ற எண்ணத்திலேயே உம்மைத் தோத்திரம் செய்யும் இந்த விஷயத்தில் எனது புத்தியானது பிரயத்தனம் செய்கிறது.

तवैश्वर्यं यत्तज्जगदुदयरक्षाप्रलयकृत्
त्रयीवस्तु व्यस्तं तिसृषु गुणभिन्नासु तनुषु ।
अभव्यानामस्मिन् वरद रमणीयामरमणीं
विहन्तुं व्याक्रोशीं विदधत इहैके जडधियः ॥ ४ ॥

தவைச்வர்யம் யத்தஜ்ஜகதுதயரக்ஷாப்ரளயக்ருத்
த்ரயீவஸ்து வ்யஸ்தம் திஸ்ருஷு குணபிந்நாஸு தநுஷு ।
அபவ்யாநாமஸ்மிந் வரத ரமணீயாமரமணீம்
விஹந்தும் வ்யாக்ரோசீம் விததத இஹைகே
ஜடதியः ॥ 4 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

4. வரங்களை அளிக்கும் பரமனே! வேதங்களில் நன்கு விளக்கப்பட்டதும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களைக் கொண்டு உலகினைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யும் மூன்று வடிவங்களால் ஆனதுமான உனது தலைமைத் தன்மையினை கண்டனம் பண்ணுவதற்கு அறியாமையில் கிடப்பவர்க்கு அழகாய்த் தோன்றுவதும், உண்மையில் அருவருப்பை அளிப்பவையான வார்த்தைகளைக் கொண்டு சில மந்தமதியினர் புலம்புகின்றனர்.

किमीहः किं कायस्सखलु किमुपायस्त्रिभुवनम्
किमाधारो धाता सृजति किमुपादान इति च ।
अतर्क्यैश्वर्ये त्वय्यनवसरदुःस्थो हतधियः
कुतर्कोऽयं कांश्चिन्मुखरयतिमोहाय जगताम् ॥ ५ ॥

கிமீஹஃ கிம்காயஸ்ஸகலு கிமுபாயஸ்த்ரிபுவநம்
கிமாதாரோ தாதா ஸ்ருஜதி கிமுபாதாந இதிச ।
அதர்க்யைச்வர்யே த்வய்யநவஸரதுஸ்தோ ஹததியஃ
குதர்க்கோ(அ)யம் காம்ச்சிந்முகரயதி மோஹாய
ஜகதாம் ॥ 5 ॥

5. உயிர்களைப் படைக்கும் இறைவன் எந்த விருப்பத்தினை பூர்த்தி செய்து கொள்வதற்காக, என்ன சரீரத்துடன் கூடி, எவ்வகையான கருவிகளைக் கொண்டு எந்த ஆதாரத்துடன், என்ன பொருள்களைக் கொண்டு இந்த மூவுலகையும் படைக்கிறான்? மனித அறிவுக்கு எட்டாத உனது தெய்வீகத் தன்மையின் விஷயமாக அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் இப்படிப்பட்ட வீணான வாதங்களையெல்லாம் உலகத்தை மயக்கமடையச் செய்யக் கருதி உரத்த குரலில் பேசுகின்றனர்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

अजन्मानो लोकाः किमवयववन्तोऽपि जगतां
अधिष्ठातारं कि भवविधिरनादृत्य भवति ।
अनीशो वा कुर्याद्भुवनजनने कः परिकरो
यतो मन्दास्त्वां प्रत्यमरवर सशेरत इमे ॥ ६ ॥

அஜந்மானோ லோகாः கிமவயவவந்தோ(அ)பி ஜகதாம்
அதிஷ்டாதாரம் கிம் பவவிதிரநாத்ருத்ய பவதி ।
அநீசோ வா குர்யாத்புவநஜநநே கः பரிகர :
யதோ மந்தாஸ்த்வாம் ப்ரத்யமரவர ஸம்சேரத
இமே ॥ 6 ॥

6. தேவர்களுக்கெல்லாம் தலைவனே (மஹா தேவனே)! அவயவங்கள் (பாகங்கள்) உள்ளனவாயினும் இந்த உலகங்கள் உண்டாகாதவையா? படைக்கும் கர்த்தா ஒருவனில்லாது உலகத்தின் சிருஷ்டியானது உண்டாக முடியுமா? ஈச்வரனைத் தவிர வேறு எவரால் உலக சிருஷ்டியில் ஈடுபட முடியும்? மூடர்களானதால் இவர்கள் உம்மைப் பற்றி ஐயங்களைக் கிளப்புகின்றனர்.

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति
प्रभिन्ने प्रस्थाने परमिदमदः पथ्यमिति च ।
रुचीनां वैचित्र्यादृजुकुटिल नानापथजुषां
नृणामेको गम्यस्त्वमसि पयसामर्णव इव ॥ ७ ॥

த்ரயீ ஸாங்க்யம் யோகः பசுபதிமதம் வைஷ்ணவமிதி
ப்ரபிந்நே ப்ரஸ்தாநே பரமிதமதः பத்யமிதி ச ।
ருசீநாம் வைசித்ர்யாத் ருஜுகுடில நாநாபதஜுஷாம்
ந்ருணுமேகோ கம்யஸ்த்வமஸி பயஸாமர்ணவ
இவ ॥ 7 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

7. மூன்று வேதங்கள், சாங்க்யம், யோகம், பாசுபதம், வைஷ்ணவம் எனப் பல்வேறு பட்ட மதங்கள் உள்ளன. இது நல்லது, அது சரியானது என்று மக்கள் தங்கள் மனோருசி களுக்கேற்ப ஒவ்வொன்றைக் கடைபிடிக்கின்றனர். கோணலாயும் நேராயும் உள்ள பல ஆறுகளின் தண்ணீர் எல்லாம் கடலையே சென்றடைவது போல, அந்த எல்லா மதங்களாலும் அடையப்பட வேண்டியவர் நீர் ஒருவரே ஆவீர்.

महोक्षः खट्वांगं परशुरजिनं भस्म फणिनः
कपालं चेतीयत्तव वरद तंत्रोपकरणम् ।
सुरास्तां तामृद्धिं दधति तु भवद्भ्रूप्रणिहितां
न हि स्वात्मारामं विषयमृगतृष्णा भ्रमयति ॥ ८ ॥

மஹோக்ஷ: கட்வாங்கம் பரசுரஜிநம் பஸ்ம பணிந:
காபலம் சேதீயத்தவ வரத தந்த்ரோபகரணம் ।
ஸுராஸ்தாம் தாம்ருத்திம் தததி து பவத்ப்ரூ
ப்ரணிஹிதாம்
ந ஹி ஸ்வாத்மாராமம் விஷய ம்ருகத்ருஷ்ணூ
ப்ரமயதி ॥ 8 ॥

8. வரத்தை அளிக்கும் பரமனே! கிழக்காஞமாடும் கட்டுவாங்கம் என்னும் ஆயுதமும், கோடாரியும், தோலும், திருநீறும், ஸர்ப்பங்களும், மண்டையோடுமே உமக்கு உப கரணங்கள். ஆனல் உனது புருவத்தின் அசைப்பினுல் உண்டான மிக உயர்ந்த செல்வத்தை தேவர்கள் அனுபவிக் கின்றனர். தனது ஆத்மாவிடம் ரமிக்கும் ஆத்மஞானியை கானல் நீர் போன்ற இந்த விஷயங்கள் மயக்காதல்லவா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ध्रुवं कश्चित् सर्वं सकलमपरस्त्वध्रुवमिदं
परो ध्रौव्याध्रौव्ये जगति गदति व्यस्तविषये ।
समस्तेऽप्येतस्मिन् पुरमथन तैर्विस्मित इव
स्तुवन् जिह्रेमित्वां न खलु ननु धृष्टा मुखरता ।।९।।

த்ருவம் கச்சித் ஸர்வம் ஸகலமபரஸ்த்த த்ருவமிதம்
பரோ த்ரௌவ்யாத்ரௌவ்யே ஜகதி கததி வ்யஸ்த விஷயே ।
ஸமஸ்தே(அ)ப்யேதஸ்மிந் புரமதந தைர்விஸ்மித இவ
ஸ்துவன் ஜிஹ்ரேமி த்வாம் ந கலு நநு த்ருஷ்டா முகரதா ।। 9 ।।

9. முப்புரமெரித்த பெருமானே! சிலர் உலகம் முழுவதும் நிலையானது என்று கூறுகிறார்கள். வேறு சிலர் இந்த உலகமனைத்தும் நிலையானது அல்ல என்று கூறுகிறார்கள். மற்றும் சிலர் இவையனைத்தும் வேறு வேறு தன்மைகளைக் கொண்டு நித்யமாயும் அநித்யமாயும் உள்ளன என்று கூறுகிறார்கள். இவர்களால் ஆச்சர்யமடைந்த நானே எனில் உன்னைத் துதிப்பதற்குத் தயக்கப்படவில்லை. என்னுடைய இந்த வாயாடித்தனம் என்னுடைய துணிவினைக் காட்டுகின்றது.

तवैश्वर्यं यत्नाद्यदुपरि विरिञ्चो हरिरधः
परिच्छेत्तुं यातावनलमनलस्कन्धवपुषः ।
ततो भक्तिश्रद्धाभरगुरु-गृणद्भ्यां गिरिश यत्
स्वयं तस्थे ताभ्यां तव किमनुवृत्तिर्न फलति ।।१०।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

தவைச்வர்யம் யத்நாத்யதுபரி விரிஞ்சோஹரிரதः
பரிச்சேத்தும் யாதாவநலமநலஸ்கந்தவபுஷः ।
ததோ பக்திச்ரத்தாபரகுரு க்ருணத்ப்யாம் கிரிச யத்
ஸ்வயம் தஸ்தே தாப்யாம் தவ கிமனுவ்ருத்திர் ந
பலதி ।। 10 ।।

10. ஓ கிரிசனே! அக்னிஸ்தம்பமாக உருவெடுத்துக் கொண்ட உமது பெருமையை பிரம்மதேவன் மேல் நோக்கியும் மஹாவிஷ்ணு கீழ் நோக்கியும் முழு முயற்சியுடன் சென்றும் உமது மகிமையை அளந்தறிய ஆற்றல் அற்றவர்களாக ஆனார்கள். பின்னர் பக்தியுடனும் விசுவாசத்துடனும் துதித்த அவ்விருவர்கட்கும் தாமாகவே நீர் காட்சியளித்தீர். உம்மைப் பூஜிப்பது எதைத்தான் கொடுக்காது? (அனைத்தையும் கொடுக்கும் என்றபடி).

अयत्नादापाद्य त्रिभुवनमवैरव्यतिकरं
दशास्यो यद्बाहूनभृत रणकण्डूपरवशान् ।
शिरः पद्मश्रेणीरचितचरणाम्भोरुह बलेः
स्थिरायास्त्वद्भक्तेस्त्रिपुरहर विस्फूर्जितमिदम् ।। ११ ।।

அயத்நாதாபாத்ய த்ரிபுவநமவைரவ்யதிகரம்
தசாஸ்யோ யத்பாஹூநப்ருத ரணகண்டூபரவசாந் ।
சிரः பத்மச்ரேணீரசிதசரணாம்போருஹ பலேः
ஸ்திராயாஸ்த்வத்பக்தேஸ்த்ரிபுரஹர விஸ்பூர்ஜித
மிதம் ।। 11 ।।

11. முப்புரமெரித்த பிரானே! இராவணன் மூன்று உலகங்களிலும் பிரயத்தனமின்றியே, தனக்கு விரோதிகளில்லாமல் செய்துகொண்டு, யுத்தத்தின் மேல் விருப்பம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

கொண்டவனுய் தினவு கொண்ட இருபது கரங்களையுமுடை யவனுய் இருந்தான் என்பது தனது தலைகளாகிய தாமரை மலர்களின் கூட்டத்தை உமது திருவடியின் பூஜைக்குரியன வாகச் செய்த த்ருடமான பக்தியினுல் உண்டான பலனேயா கும்.

अमुष्य त्वत्सेवासमधिगतसारं भुजवनं
बलात्कैलासेऽपि त्वदधिवसतौ विक्रमयतः ।
अलभ्या पातालेऽप्यलसचलिताङ्गुष्ठशिरसि
प्रतिष्ठात्वय्यासीद्ध्रुवमुपचितो मुह्यति खलः ॥ १२ ॥

அமுஷ்ய த்வத்ஸேவாஸமதிகதஸாரம் புஜவநம்
பலாத்கைலாஸே(அ)பி த்வததிவஸதௌ விக்ர-
மயதः ।
அலப்யா பாதாலே(அ)ப்யலஸசலிதாங்குஷ்ட சிரஸி
ப்ரதிஷ்டாத்வய்யாஸீத் த்ருவமுபசிதோ முஹ்யதி
கலः ॥ 12 ॥

12. உம்மைப் பூஜித்து அதனுல் மிகுந்த பலத்தை யடைந்த தன் கைகளின் வரிசையை உம்முடைய வாஸ ஸ்தலமான கைலாஸ பர்வதத்தினிடமே காண்பித்த (கைலை யைத் தூக்க முயற்சித்த) அந்த இராவணனே நீர் உமது கால் பெருவிரலைச் சிறிதே அழுத்தி ஊன்றியபோது பாதா ளம் வரையில் கீழே தள்ளப்பட்டு அங்கும் இருப்பதற்கு அரியநிலை ஏற்பட்டது ஐச்வர்யத்தினுல் துஷ்டன் நிச்சய மாக மோஹத்தையடைகிறுன்.

यदृद्धिं सुत्राम्णो वरद परमोच्चैरपि सती-
मधश्चक्रे बाणः परिजनविधेयत्रिभुवनः ।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

न तच्चित्रं तस्मिन् वरिवसितरि त्वच्चरणयोः
न कस्या उन्नत्यै भवति शिरसस्त्वय्यवनतिः ॥ १३ ॥

யத்ருத்திம் ஸுத்ராம்ணே வரத பரமோச்சைரபி
ஸதீம்
அதச்சக்கரே பாணः பரிஜநவிதேய த்ரிபுவநः ।
ந தச்சித்ரம் தஸ்மிந் வரிவஸிதரி த்வச்சரணயோः
ந கஸ்யா உந்நத்யை பவதி சிரஸஸ்த்வய்-
ய தिः ॥ 13 ॥

13. வ ர ங் க ளை அருளும் பிரானே ! பாணன் என்ற அஸுரன் மூவுலகங்களையும் தனக்கு அடிமையாகச் செய்து விட்டான் என்பது உம்முடைய திருவடிகளில் நமஸ்கரித்த அவனிடம் அதிசயம் அல்ல. உம்மிடத்தில் செய்யப்படும் தலைவணக்கம் எத்தகைய உயர்வைத் தான் கொடுக்காது ?

அகாण्ड ब्रह्माण्ड क्षयचकित देवासुरकृपा-
विधेयस्याऽऽसीद्यस्त्रिनयन विषं संहृतवतः ।
स कल्माषः कण्ठे तव न कुरुते न श्रियमहो
विकारोऽपि श्लाघ्योभुवनभय भङ्गव्यसनिनः ॥ १४ ॥

அகாண்ட ப்ரம்மாண்ட க்ஷயசகித்தேவாஸுரக்ருபா-
விதேயஸ்யா(ஆ)ஸீத்யஸ்த்ரிநயந விஷம்
ஸம்ஹ்ருதவதः ।
ஸ கல்மாஷ:கண்டே தவ ந குருதே ந ச்ரியமஹோ
விகாரோ(அ)பி ச்லாக்யோ புவநபய பங்கவ்ய-
ஸநிநः ॥ 14 ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

14. முக்கண்ணனே! எதிர்பாராது உலகமனைத்தையும் அழிக்கத் தக்கதாகத் தோன்றிய ஹாலகால விஷத்தினால் பயமடைந்த தேவாசுரர்களின் மீது வைத்த கருணையினால் அந்த விஷத்தை விழுங்கிய உமது கழுத்தில் ஏற்பட்ட அந்தக் கறை உமக்கு அழகையே கொடுத்ததன்றோ? உலகத்தை அச்சத்தினின்றும் காப்பதில் ஈடுபட்டவர்க்கு விகாரமும் கொண்டாடத்தக்க அலங்காரமேயாகும் அல்லவா?

असिद्धार्था नैव क्वचिदपि सदेवासुरनरे
निवर्तन्ते नित्यं जगति जयिनो यस्य विशिखाः।
स यश्चन्नीश त्वामितरसुरसाधारणमभूत्
स्मरः स्मर्तव्यात्मा न हि वशिषु पथ्यः परिभवः॥१५॥

அஸித்தார்த்தா நைவ க்வசித்பி ஸதேவாஸுரநரே
நிவர்தந்தே நித்யம் ஜகதி ஜயிநோ யஸ்ய விசிகாः
ஸ பச்யந்நீச த்வாமிதரஸுரஸாதாரணமபூத்
ஸ்மரः ஸ்மர்த்தவ்யாத்மா நஹி வசிஷுபத்யः
பரிபவः॥ 15 ॥

15. ஈசனே! எவனுடைய வெற்றியுடைய பாணங்கள் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் கூடிய மூவுலகங்களிலும் ஓரிடத்திலும் கூடப் பயனையடையாது எப்பொழுதும் திரும்பமாட்டாவோ, அந்த மன்மதன் உம்மை மற்ற ஸாதாரணமான தேவர்களைப் போல் நினைத்து (பாணங்களை உம்மீது விட்டபடியால்) நினைவில் மட்டும் இருக்கக் கூடியவனுய் ஆனன். ஏனெனில் இந்திரியங்களை ஜயித்தவர்களான மஹா புருஷர்களிடம் செய்யும் அவமானமானது நன்மையைச் செய்யாதல்லவா?

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

मही पादाघाताद्व्रजति सहसा संशयपदं
पदंविष्णोर्भ्रात्यद्भुजपरिघरुग्णग्रहगणम् ।
मुहुर्द्यौर्दौस्थ्यं यात्यनिभृत जटाताडिततटा
जगद्रक्षायै त्वं नटसि ननु वामैव विभुता ।। १६ ।।

மஹீ பாதாகாதாத்வ்ரஜதி ஸஹஸா ஸம்சயபதம்
பதம் விஷ்ணோர்ப்ராத்யத்புஜபரிகருக்ணக்ரஹ
கணம் ।
முஹுர்த்யௌர்தௌஸ்த்யம் யாத்யநிப்ருதஜடா
தாடித தடா
ஜகத்ரக்ஷாயை த்வம் நடஸி நநு வாமைவ
விபுதா ।। 16 ।।

16. நீர் எப்போது உலகத்தைக் காப்பாற்றுவதற்காக தாண்டவம் புரிகின்றீரோ அப்போது உமது கால்களின் தாக்குதலால் பூமியானது தான் நிலைத்திருக்குமோ என்னவோ என்ற ஐயநிலையையடைகிறது. உம்முடைய இரும்புத் தடிகள் போன்றவையான புஜங்களின் சுழற்சியால் கிரஹக் கூட்டங்களுடன் கூடிய மேலுலகமும், உன்னுடைய விரிந்த சடைகளால் தாக்கப்பட்ட பகுதியையுடைய சுவர்க்கலோகமும் துக்கநிலையை அடைகின்றன. உன்னுடைய பிரபுத் தன்மையும் பிரதிகூலத்தையே தருவதாகின்றது. இது ஆச்சரியம்.

वियद्व्यापी तारागण गुणितफेनोद्गमरुचिः
प्रवाहो वारां यः पृषतलघुदृष्टशिरसि ते ।
जगद्द्वीपाकारं जलधिवलय तेन कृतमि-
त्यनेनैवोन्नेयं धृतमहिम दिव्यं तव वपुः ।। १७ ।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வியத்வ்யாபீ தாராகண குணிதபேநோத்கமருசிः
ப்ரவாஹோ வாராம் யः ப்ருஷதலகுத்ருஷ்டச்
சிரஸி தே ।
ஜகத்த்வீபாகாரம் ஜலதிவலயம் தேந க்ருதமிதி
அநேநைவோந்நேயம் த்ருதமஹிம தி வ்யம் தவ
வபுः ।। 17 ।।

17. ஆகாயம் முழுமையும் வியாபித்ததும், நக்ஷத்திரக் கூட்டங்களால் மேலும் அழகூட்டப்பட்ட நுரையினையுடையதுமான கங்கா நதியின் பெருக்கானது உமது தலையில் ஒரு திவலையினும் நுண்ணியதாய்க் காணப்பட்டது. பின்னர் அதனாலேயே இந்த உலகம் கடல்களோ வலயமாகவுடைய தீவுகளாகச் செய்யப்பட்டன. இதனால் உமது திவ்யமான சரீரத்தினது மகிமையானது ஊஹித்து அறியப்படுகிறது.

रथः क्षोणी यन्ता शतधृतिरगेन्द्रो धनुरथो
रथाङ्गे चन्द्रार्कौ रथचरणपाणिश्शर इति ।
दिधक्षोस्ते कोऽयं त्रिपुरतृणमाडम्बरविधिः
विधेयैः क्रीडन्त्यो न खलु परतन्त्राः प्रभुधियः ।। १८ ।।

ரதः க்ஷோணீ யந்தா சதத்ருதிரகேந்த்ரோ தனுரதோ
ரதாங்கே சந்த்ரார்க்கௌ ரதசரணபாணிः சரஇதி ।
திதக்ஷோஸ்தே கோ(அ)யம் த்ரிபுரத்ருணமாடம்பர
விதிः
விதேயைःக்ரீடந்த்யோ ந கலு பரதந்த்ராः ப்ரபு
தியः ।। 18 ।।

18. ஈசனே! உமக்கு அற்பமான புல்லைப் போன்ற முப்புரங்களை எரிக்க நீர் விரும்பியபோது பூமி தேராகவும்,

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பிரம்மதேவன் ஸாரதியாகவும் மேரு பர்வதம் வில்லாகவும் மற்றும் சந்திர சூரியர்கள் இரண்டு தேர்ச்சக்கரங்களாகவும், சக்கரபாணியான மஹாவிஷ்ணு அம்பாகவும் இருந்தனர். இத்தகைய ஆடம்பரங்கள் உமக்கு எதற்காக? (முப்புரத்தை இறைவன் புன்னகையால் எரித்தான் என்பது வரலாறு) ஒரு ப்ரபுவினது புத்தியானது ஒருபொழுதும் தன் கீழுள்ளவர்களை எதிர்பார்த்து இருப்பதில்லை. (அவர்களை எதிர்பார்ப்பது போல் காட்டி) விளையாடுவார்கள் என்றவாறு.

हरिस्ते साहस्रं कमलबलिमाधाय पदयोः
यदेकोनें तस्मिन् निजमुदहरन्नेत्रकमलम् ।
गतो भक्त्युद्रेकः परिणतिमसौ चक्रवपुषा
त्रयाणां रक्षायै त्रिपुरहर जागर्ति जगताम् ।। १९ ।।

ஹரிஸ்தே ஸாஹஸ்ரம் கமலபலிமாதாயபதயோ:
யதேகோநே தஸ்மிந் நிஜமுதஹரந்நேத்ரகமலம் ।
கதோ பக்த்யுத்ரேக: பரிணதிமஸௌ சக்ரவபுஷா
த்ரயாணும் ரக்ஷாயை த்ரிபுரஹர ஜாகர்த்தி
ஜகதாம் ।। 19 ।।

19: முப்புரமெரித்த பரமனே! மஹா விஷ்ணுவானவர் உமது திருவடிக்ளில் ஆயிரம் தாமரை மலர்களால் பூஜை யினைச் செய்து அவ்வாயிர மலரில் ஒன்று குறைந்த பொழுது தனது கண்ணை தாமரையையே பிடுங்கி அர்பணித்தார் என்ற இந்த பக்தியின் பெருக்கே ஸுதர்சனமென்னும் சக்கர ரூபமாய் பரிணமித்து மூன்று உலகங்களையும் ரக்ஷிக்கும் பொருட்டு விழித்துக் கொண்டிருக்கிறது.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

क्रतौ सुप्ते जाग्रत्त्वमसि फलयोगे क्रतुमतां
क्व कर्म प्रध्वस्तं फलति पुरुषाराधनमृते
अतस्त्वां संप्रेक्ष्य क्रतुषु फलदानप्रतिभुवं
श्रुतौ श्रद्धां बद्ध्वा दृढपरिकरः कर्मसु जनः ।। २० ।।

க்ரதௌ ஸுப்தே ஜாக்ரத் த்வமஸி பலயோகே
க்ரதுமதாம்
க்வ கர்ம ப்ரத்வஸ்தம் பலதி புருஷாராதநம்ருதே ।
அதஸ்த்வாம் ஸம்ப்ரேக்ஷ்ய க்ரதுஷு பலதாந-
ப்ரதிபுவம்
ச்ருதௌ ச்ரத்தாம் பத்வா த்ருடபரிகரः கர்மஸு
ஜநः ।। 20 ।।

20. யாகம் செய்து முடிந்து விட்டது. அந்த வேள்வியின் பயனைக் கொடுப்பதற்கு நீ காத்திருக்கிறாய். ஈச்வரனை வழி படாமல் முடிந்து போன கர்மாக்கள் எப்படிப் பலனளிக்கும். ஆகையினால் கர்மாக்களுக்குப் பலனளிப்பவன் நீயே என்று அறிந்து வேதவாக்யங்களில் நம்பிக்கை வைத்து யாகாதி கர்மாக்களைச் செய்வதில் ஜனங்கள் உறுதியாய் இருக்கிறார்கள்.

क्रियादक्षो दक्षः क्रतुपतिरधीशस्तनुभृता-
मृषीणामार्त्विज्यं शरणद सदस्याः सुरगणाः ।
क्रतुभ्रंशस्त्वत्तः क्रतुफलविधानव्यसनिनो
ध्रुवं कर्तुः श्रद्धाविधुरमभिचाराय हि मखाः ।। २१ ।।

க்ரியாதக்ஷோ தக்ஷः க்ரதுபதிரதீசஸ்தநுப்ருதாம்
ருஷீணமார்த்விஜ்யம் சரணத ஸதஸ்யாः ஸுரகணாः

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

க்ரதுப்ரம்சஸ்த்வத்த: க்ரதுபலவிதாநவ்யஸநிநோ
த்ருவம் கர்த்து: ச்ரத்தாவிதுரமபிசாராய ஹி
மகா: ॥ 21 ॥

21. அனைவருக்கும் அடைக்கலமளிப்பவரே! யாகங்கள் செய்வதில் வல்லவரான தக்ஷப்பிரஜாபதியானவர் தானே யாகம் செய்பவராயும், ரிஷிகளே ரித்விக்குகளாகவும், தேவர்களே சபையினராகவும் கொண்டு நடத்திய யாகமானது, யாகத்திற்குப் பலன்களை அளிப்பவரான உம்மாலேயே அழிக்கப்பட்டது. ஏனெனில் உம்மிடம் பக்தியில்லாமல் செய்யப்படும் யாகமானது செய்பவனையே அழித்துவிடும் ஆபிசாரமாகிவிடும் என்பது நிச்சயம்.

प्रजानाथं नाथ प्रसभमभिकं स्वां दुहितरं
गतं रोहिद्भूतां रिरमयिषुमृष्यस्य वपुषा ।
धनुष्पाणेर्यातं दिवमपि सपत्राकृतममुं
त्रसंतंतेऽद्यापि त्यजति न मृगव्याधरभसः ॥ २२ ॥

ப்ரஜாநாதம் நாத ப்ரஸபமபிகம் ஸ்வாம் துஹிதரம்
கதம் ரோஹித்பூதாம் ரிரமயிஷுமம்ருஷ்யஸ்யவபுஷா ।
தநுஷ்பாணேர்யாதம் திவமபி ஸபத்ராக்ருதமமும்
த்ரஸந்தந்தேத்யாபி த்யஜதி ந ம்ருகவ்யாத-
ரபஸ ॥ 22 ॥

22. உயிர்களைப் படைக்கின்ற பிரம்மதேவன் தன்னுடைய மகளையே (திலோத்தமை) ஆசைப்பட்டுப் பலவந்தமாக அடைய முயற்சித்தான். அவள் பயந்து பெண்மானின் உருவமெடுத்து ஓடிய பொழுது ஆண்மானின் உருவமெடுத்து அவளைத் துரத்திய பிரம்மதேவனை கையில் வில்லுடன் கூடிய

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

வேடனது உருவமெடுத்த உமது கோபம், உமது அம்பினால் தாக்கப்பட்டுப் பயமடைந்து ஆகாயத்திற்கு ஓடியும், அவனை இப்பொழுதும் விட்டுவிடவில்லை.

स्वलावण्याशंसा धृतधनुषमह्नाय तृणवत्
पुरः प्लुष्टं दृष्ट्वा पुरमथन पुष्पायुधमपि ।
यदि स्त्रैणं देवी यमनिरत देहार्द्धघटना-
दवैति त्वामद्धा बत वरद मुग्धायुवतयः ॥ २३ ॥

ஸ்வலாவண்யா சம்ஸா த்ருததநுஷமஹ்நாய த்ருணவத்
புரःப்லுஷ்டம் த்ருஷ்ட்வா புரமதன புஷ்பாயுதமபி ।
யதி ஸ்த்ரைணம் தேவீ யமநிரத தேஹார்த்தகடநாத்
அவைதி த்வாமத்தா பதவரத முக்தாயுவதயः ॥ 23 ॥

23. முப்புறங்களை எரித்த பரமனே! வரதங்களை அருளும் வரதனே! கையினில் வில்லுடன் கூடிய காதற் கடவுளான மன்மதன் தன் கண்ணெதிரிலேயே ஒரு சிறு துரும்பு போல் கணத்தில் எரிந்து போனதைக் கண்கூடாகக் கண்டபின்பும், தனது கடுமையான தவத்தின் பயனாய் உமது பாதிப் பாகத்தில் இருக்கும் தன்மைபைப் பெற்ற பார்வதி தேவியானவள், தனது அழகினால் கர்வங்கொண்டு நீர் அவளது மோஹத்தில் மூழ்கி இருப்பதாகக் கருதினாளானால். அந்தோ! இந்த இளம் பெண்கள் மடமையில் மூழ்கி இருக்கிறார்கள் என்பது நிச்சயம்.

स्मशानेष्वाक्रीडा स्मरहर पिशाचास्सहचराः
चिताभस्मालेपः स्रगपि नृकरोटीपरिकरः ।
अमङ्गल्यं शीलं तव भवतु नामैवमखिलं
तथापि स्मर्तॄणां वरद परमं मङ्गलमसि ॥ २४ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ச்மசாநேஷ்வாக்ரீடா ஸ்மரஹர பிசாசாஸ்ஸஹசராः
சிதாபஸ்மாலேபः ஸ்ரகபி ந்ருகரோடீபரிகரः ।
அமங்கல்யம் சீலம் தவ பவது நாமைவமகிலம்
ததாபி ஸ்மர்த்ருணாம் வரத பரமம் மங்களமஸி ।।24।।

24. மன்மதனை எரித்தவரே! வரதனே! மயானத்தில் உமது விளையாட்டு, உடனிருப்பவர்கள் பூதகணங்கள், உடல்களின் எரிந்த சாம்பலே உமது திருமேனியின் மேல் பூச்சு, மனித மண்டை ஓடுகளாலானதே உமது மாலை, உமது இந்த நடத்தைகளெல்லாம் அமங்களமானவைகளே தான் ஆயினும் உன்னை நினைப்பவர்களுக்கு நீர் மிக உயர்ந்த மங்களத்தை அருளுபவராக இருக்கின்றீர்.

मनः प्रत्यक्चित्ते सविधमवधायात्तमरुतः
प्रहृष्यद्रोमाणः प्रमदसलिलोत्सङ्गितदृशः ।
यदालोक्याह्लादं ह्रद इव निमज्ज्यामृतमये
दधत्यंतस्तत्त्वं किमपि यमिनः तत्किल भवान् ।। २५ ।।

மநः ப்ரத்யக்சித்தே ஸவிதமவதாயாத்தமருதः
ப்ரஹ்ருஷ்யத்ரோமாணः ப்ரமதஸலிலோத்-
ஸங்கிதத்ருசः ।
யதாலோக்யாஹ்லாதம் ஹ்ரத இவ நிமஜ்யாமருதமயே
ததத்யந்தஸ்தத்வம் கிமபி யமிநः தத்கில
பவாந் ।। 25 ।।

25. யோகிகள் சாஸ்திர விதிகளின் படி அந்தர்முகமாக இருந்து மூச்சையும் மனதையுமடக்கி எந்த தத்துவத்தைத் தமக்குள் தியானம் செய்து அனுபவித்து அந்த அனுபவ ஆனந்தத்தால் மயிர்க்கூச்செறிந்து ஆனந்தக் கண்ணீர்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பெருக்கெடுத்தோட அம்ருதமயமான கடலில் திளைப்பது, போல ஆத்மானந்தத்தை அடைகிருர்களோ, அந்த உண்மை யான தத்துவம் நீயே.

त्वमर्कस्त्वं सोमस्त्वमसि पवनस्त्वं हुतवहः
त्वमापस्त्वं व्योम त्वमु धरणिरात्मा त्वमिति च ।
परिच्छिन्नामेवं त्वयि परिणता बिभ्रति गिरं
न विद्मस्तत्तत्त्वं वयमिह तु यत् त्वं न भवसि ॥ २६ ॥

த்வமர்க்கஸ்த்வம் ஸோமஸ்த்வமஸி பவநஸ்த்வம்
ஹுதவஹ:
த்வமாபஸ்த்வம் வ்யோம த்வமு தரணிராத்மா
த்வமிதி ச ।
பரிச்சிந்நாமேவம் த்வயி பரிணதா பிப்ரதி கிரம்
ந வித்மஸ்தத்தத்வம் வயமிஹ து யத் த்வம் ந
பவஸி ॥ 26 ॥

26. நீ சூரியன், நீ சந்திரன், நீ காற்றுக - இருக்கிறாய் நீ அக்கினியாகவும், ஜலமாகவும், ஆகாயமாகவும், பூமியாக வும், ஆத்மாவாகவுமிருக்கிறாய் என்று ஒரு அளவுக்குட் பட்டவைகளானவையாக உன்னைப் பற்றி அறிஞர்கள் எண்ணுகிறார்கள் ஆனால் நீயாக இல்லாத எந்த ஒரு வஸ்து வையும் நாங்கள் அறியவில்லை.

त्रयीं तिस्रो वृत्तीस्त्रिभुवनमथो त्रीनपिसुरान्
अकाराद्यैर्वर्णैः त्रिभिरभिदधत्तीर्णविकृति ।
तुरीयं ते धाम ध्वनिभिरवरुन्धानमणुभिः
समस्तं व्यस्तं त्वां शरणद गृणात्योमिति पदम् ॥ २७ ॥

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

த்ரயீம் திஸ்ரோ வ்ருத்தீஸ்த்ரிபுவநமதோ த்ரீநபி ஸுராந்
அகாராத்யைர்வர்ணை: த்ரிபிரபித்தத் தீர்ண-
விக்ருதி ।
துரீயந்தே தாம த்வநிபிரவருந்தாநமணுபி:
ஸமஸ்தம் வ்யஸ்தம் த்வாம் சரணத க்ருணுத்-
யோமிதிபதம் ॥ 27 ॥

27. அடைக்கலம் அளிக்கும் பெருமானே! மூன்று வேதங்கள், மூன்று நிலைகள், மூன்று உலகங்கள், மூன்று மூர்த்திகள் இவைகளைக் குறிக்கும் 'அ' கார, 'உ' ம' காரங்களால் ஆன 'ஓம்' என்னும் பதம் தனியாக உன்னைக் குறிப்பிடுகிறது. சூக்ஷ்மமான ஒலியிலுல் ஒன்று சேர்க்கப் பட்ட பிரணவமான 'ஓம்' மொத்தமாக அநாதியான பரப்ரம்ம ஸ்ரூபமாக உன்னைக் குறிப்பிடுகின்றது.

भवश्शर्वो रुद्रः पशुपतिरथोग्र सहमहां
स्तथा भीमेशानाविति यदभिधानाष्टकमिदम् ।
अमुष्मिन्प्रत्येकं प्रविचरति देव श्रुतिरपि
प्रियायास्मै धाम्ने प्रणिहित नमस्योऽस्मि भवते ॥२८॥

பவச்சர்வோருத்ர: பசுபதீரதோக்ரஸ்ஸஹமஹாந்
ததா பீமேசாநாவிதி யதபிதாநஷ்டகமிதம் ।
அமுஷ்மிந்ப்ரத்யேகம் ப்ரவிசரதி தேவ ச்ருதிரபி
ப்ரியாயாஸ்மை தாம்நே ப்ரணிஹித நமஸ்-
யோஸ்மி பவதே ॥ 28 ॥

28. பவன், சர்வன், ருத்ரன், பசுபதி, உக்ரன், மஹாதேவன், பீமன், ஈசானன் என்கிற இந்த எட்டு பெயர்களையும் ஓ தேவ! வேதமானது தனித்தனியாக உன்னைப் பற்றிக்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குறிப்பிடுகிறது. அப்படி வேதங்களுக்குப் பிரியமாயிருப்பவனும் ஜோதிப் பிழம்பானவனுமான உன்னை நான் நமஸ்கரிக்கின்றேன்.

नमो नेदिष्ठाय प्रियदव दविष्ठाय च नमो
नमः क्षोदिष्ठाय स्मरहर महिष्ठाय च नमः ।
नमो वर्षिष्ठाय त्रिणयन यविष्ठाय च नमो
नमस्सर्वस्मै ते तदिद मतिसर्वाय च नमः ।। २९ ।।

நமோ நேதிஷ்டாய ப்ரியதவ தவிஷ்டாய ச நமோ
நமः க்ஷோதிஷ்டாய ஸ்மரஹர மஹிஷ்டாய ச நமः ।
நமோ வர்ஷிஷ்டாய த்ரிணயந யவிஷ்டாய ச நமோ
நமஸ்ஸர்வஸ்மை தே ததித மதிஸர்வாய ச
நமः ।। 29 ।।

29. காடுகளை நேசிப்பவரே! வெகு அருகில் இருக்கும் உமக்கு வணக்கம். மிகவும் தூரத்தில் இருப்பவரான உமக்கு வணக்கம். மன்மதனை எரித்த பிரானே! மிக நுண்ணியராயும், மிகப் பெரியவராயுமுள்ள உமக்கு வணக்கம். முக்கண்ணனே மிகப் பழமையானவரும், மிகப் புதியவருமான உமக்கு நமஸ்காரம். எல்லாமாயிருப்பவரும், எல்லாவற்றையும் கடந்து நிற்பவருமான உமக்கு வணக்கம்.

बहुलरजसे विश्वोत्पत्तौ भवाय नमो नमः
प्रबलतमसे तत्संहारे हराय नमो नमः ।
जनसुखकृते सत्त्वोद्रिक्तौ मृडाय नमो नमः
प्रमहसि पदे निस्त्रैगुण्ये शिवाय नमो नमः ।। ३० ।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

பஹுளரஜஸே விச்வோத்பத்தௌ பவாய நமோ நம:
ப்ரபலதமஸே தத்ஸம்ஹாரே ஹராய நமோ நம: ।
ஜநஸுகக்ருதே ஸத்த்வோத்ரிக்தௌ ம்ருடாய நமோ
நமே:
ப்ரமஹஸி பதே நிஸ்த்ரைகுண்யே சிவாய நமோ
நம: ॥ 30 ॥

30. ராஜோ குணமிகுதியுடன் உலகைப் படைக்கும் பவனுகிய உமக்கு வணக்கம். தமோ குணத்தின் மிகுதியுடன் அதனை அழிக்கும் ஹரனுகிய உமக்கு வணக்கம். ஸத்வ குணத்தின் மிகுதியால் ஜனங்களுக்கு சந்தோஷத்தைச் செய்யும் (காக்கும்) ம்ருடனுகிய உமக்கு வணக்கம். முக்குணங்களையும் கடந்து நிற்கும் பரப்ரஹ்ம தத்துவத்தில் சிவன் என விளங்கும் உமக்கு வணக்கம்.

कृशपरिणति चेतः क्लेशवश्यं क्व चेदं
क्व च तव गुणसीमोल्लंघिनी शश्वदृद्धिः ।
इति चकितममंदीकृत्य मां भक्तिराधात्
वरद चरणयोस्ते वाक्य पुष्पोपहारम् ॥ ३१ ॥

க்ருசபரிணதி சேதஃ க்லேசவச்யம் க்வ சேதம்
க்வ ச தவ குணஸீமோல்லங்கிநீ சச்வத்ருத்திஃ ।
இதி சகிதமமந்தீக்ருத்ய மாம் பக்திராதாத்
வரத சரணயோஸ்தே வாக்யபுஷ்போப-
ஹாரம் ॥ 31 ॥

31. வரதனே! துயரங்களுக்குள்ளானதும் மலின மடைந்ததுமான எனது மனமெங்கே? என்றும் அனந்தமான குணங்களுடையதும் அழிவற்றதுமான உனது மகிமை

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

எங்கே ? இதன் காரணமாக நான் (உன்னைத் துதிக்க) பய மடைந்த போதிலும், உன்மீது வைத்த பக்தியானது என்னை பயத்தினின்றும் விலக்கி இந்த வாக்ய புஷ்ப மாலையை உனக் குச் ஸமர்ப்பிக்கும்படி என்னை நிர்ப்பந்தப்படுத்தியது.

असित गिरिसमं स्यात्कज्जलं सिन्धुःपात्रं
सुरतरुवरशाखा लेखिनी पत्रमुर्वी ।
लिखति यदि गृहीत्वा शारदासर्वकालं
तदपि तवगुणानामीश पारं न याति ।। ३२ ।।

அஸிதகிரி ஸமம் ஸ்யாத்கஜ்ஜலம் ஸிந்துः பாத்ரம்
ஸுரதருவரசாகா லேகிநீ பத்ரமுர்வீ ।
லிகதி யதி க்ருஹீத்வா சாரதா ஸர்வ காலம்
ததபி தவ குணாநாமீச பாரம் ந யாதி ।। 32 ।।

32. ஈசனே ! நீலமலையே மசியாகவும் (மசி செய்ய உதவும் பொடி) ஸமுத்திரமே பாத்திரமாகவும், தேவ லோகத்து மரத்தின் கிளையே எழுதுகோலாகவும், பூமியே ஓலையாகவும் அமைய ஸரஸ்வதி தேவியே ஸர்வ காலமும் எழுதினாலும் கூட உன்னுடைய பெருமையின் எல்லையை அடைய முடியாது.

असुर सुर मुनीन्द्रैरर्चितस्येन्दुमौळेः
ग्रथित गुणमहिम्नो निर्गुणस्येश्वरस्य ।
सकल गणवरिष्ठः पुष्पदन्ताभिधानो
रुचिरमलघुवृत्तैः स्तोत्रमेतच्चकार ।। ३३ ।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

அஸுர ஸுர முநீந்த்ரைரர்ச்சிதஸ்யேந்துமௌளேः
கரதிதகுணமஹிம்நோ நிர்க்குணஸ்யேச்வரஸ்ய ।
ஸகலகணவரிஷ்டः புஷ்பதந்தாபிதாநோ
ருசிரமலகுவ்ருத்தைः ஸ்தோத்ரமேதச்சகார ॥ 33 ॥

33. எவர் அசுரர், தேவர், முனிவர்கள் முதலியவர்களால் வணங்கப்படுகிறாரோ, எவர் பிறைச்சந்திரனைத் தலையில் கொண்டவரோ எவருடைய குணமகிமைகளை அனைவராலும் பாடப்பட்டுள்ளனவோ, ஆனால் எவர் நிர்க்குணமான பரமாத்ம ஸ்வரூபமோ அத்தகைய பரமசிவனுரைப் புகழ்ந்து சிவகணங்களில் சிறந்த புஷ்பதந்தர் என்ற பெயருடையவரால் அழகிய விருத்தங்களாலமைந்த இந்தத் துதியானது பாடப்பட்டது.

अहरहरनवद्यं धूर्जटेः स्तोत्रमेतत्
पठति परम भक्त्या शुद्धचित्तः पुमान् यः ।
स भवति शिवलोके रुद्र तुल्यस्तथाऽत्र
प्रचुरतरधनायुः पुत्रवान् कीर्तिमांश्च ॥ ३४ ॥

அஹரஹர்நவத்யம் தூர்ஜடேः ஸ்தோத்ரமேதத்
படதி பரமபக்த்யா சுத்தசித்தः புமாந் யः ।
ஸ பவதி சிவலோகே ருத்ரதுல்யஸ்ததா(அ)த்ர
ப்ரசுரதரதநாயுः புத்ரவாந் கீர்த்திமாம்ச்ச ॥ 34 ॥

34. பரமேச்வரரின் அழகிய இந்தத் தோத்திரத்தை தினமும் எவன் மேலான பக்தியுடன் படிக்கின்றானோ அவன் சிவலோகத்தில் சிவனுக்கு ஒப்பாயிருப்பான்: இந்த உலகத்திலும் நிறைந்த செல்வம். நீண்ட ஆயுள், குழந்தைகள், கீர்த்தி முதலியவைகளை அடைவான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

महेशान्नापरोदेवः महिम्नो नापरास्तुतिः ।
अघोरान्नापरो मन्त्रः नास्ति तत्वं गुरोः परम् ।। ३५ ।।

மஹேசாந்நாபரோ தேவ: மஹிம் நோ நாபராஸ் துதி: ।
அகோராந்நாபரோ மந்த்ர: நாஸ்திதத்வம்குரோ:
பரம் ।। 35 ।।

35. சிவபெருமானுக்கு மேலாக தெய்வமும், மஹிம்ந ஸ்துதிக்கு மேலான துதியும், அகோர மந்திரத்திற்கு மேலான மந்திரமும், குருவிற்கு மேலான தத்துவமும் (அதாவது குரு வின் உபதேசச் சிறப்பை உணர்தல்) கிடையாது.

दीक्षादानं तपस्तीर्थं ज्ञानं यागादिकाः क्रियाः ।
महिम्नः स्तवपाठस्य कलां नार्हन्ति षोडशीम् ।। ३६ ।।

தீக்ஷாதாநம் தபஸ்தீர்த்தம் ஞானம் யாகாதிகா :
க்ரியா: ।
மஹிம்நஸ் ஸ்தவபாடஸ்ய கலாம் நார்ஹந்திஷோடசீம்

36. தீக்ஷை, தானம், தவம், தீர்த்தயாத்திரை, ஞானம் யாகம் முதலிய எல்லாம் ஒன்று சேர்ந்தாலுங்கூட இந்த மஹிம்நஸ்துதியைப் படிப்பதின் பலனில் பதினாறில் ஒரு பாகத்துக்கு இணையாகாது.

कुसुमदशननामा सर्वगन्धर्वराजः
शशिधर वरमौलेर्देवदेवस्य दासः ।
स खलु निजमहिम्नो भ्रष्ट एवास्यरोषात्
स्तवनमिदमकार्षीत् दिव्यदिव्यं महिम्नः ।। ३७ ।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

குஸுமத சநநாமா ஸர்வகந்தர்வராஜ:
சசிதரவரமௌளேர் தேவதேவஸ்ய தாஸ:।
ஸ கலு நிஜமஹிம்நோ ப்ரஷ்ட ஏவாஸ்ய ரோஷாத்
ஸ்தவநமித மகார்ஷீத் திவ்யதிவ்யம் மஹிம்ந: ।। 37 ।।

37. புஷ்பதந்தன் என்ற பெயருள்ள கந்தர்வ ராஜன் பிறைச்சந்திரனை முடியில் அணிந்தசிவபெருமானின் தாஸன். அவருடைய கோபத்துக்கு ஆளாகித் தனது பெருமையி னின்றும் நழுவி விழுந்து இந்த அழகிய் சிவமஹிம்ன ஸ்தோத் திரத்தைச் செய்தார். (அதனால் இழந்த தனது பெருமையை மீண்டும் பெற்றார் என்றவாறு)

सुरवर मुनिपूज्यं स्वर्गमोक्षैकहेतुं
पठति यदि मनुष्य: प्रांजलिर्नान्यचेता: ।
व्रजति शिवसमीपं किन्नरै: स्तूयमान:
स्तवनमिदममोघं पुष्पदन्तप्रणीतम् ।। ३८ ।।

ஸுரவரமுநிபூஜ்யம் ஸ்வர்க்கமோக்ஷைகஹேதும்
படதியதிமநுஷ்ய: ப்ராஞ்ஜலிர்நாந்யசேதா: ।
வ்ரஜதி சிவஸமீபம் கிந்நரை: ஸ்தூயமாந:
ஸ்தவநமிதமமோகம் புஷ்பதந்தப்ரணீதம் ।। 38 ।।

38. சிறந்த தேவர்களாலும் முனிவர்களாலும் பூஜிக்கப் படுபவரும், ஸ்வர்க்கம் மோக்ஷம் என்னும் இரண்டையும் அளிப்பவருமான பரமசிவனை வணங்கி, புஷ்பதந்தரால் செய்யப்பட்டதும் தவறாது பலனளிப்பதுமான இந்த மஹிம்ந ஸ்தோத்ரத்தை எந்த மனிதன் ஒருமைப்பட்ட மனத்துடன் கூடிய பக்தியுடனும் கூப்பிய கரங்களுடன் படிக்கின்றானோ அவன் கின்னரர்கள் போற்றுதல் செய்ய சிவபெருமானை அடைகின்றான்.

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

आसमाप्तमिदं स्तोत्रं पूज्यं गन्धर्वभाषितम् ।
असमानं मनोहारि शिवमीश्वरवर्णनम् ।। ३९ ।।

ஆஸமாப்தமிதம் ஸ்தோத்ரம் பூஜ்யம் கந்தர்வபாஷிதம்
அஸமாநம் மநோஹாரி சிவமீச்வரவர்ணநம் ।। 39 ।।

39. தனக்கு இணையில்லாததும், பூஜிக்கத்தகுந்ததும், கந்தர்வரால் கூறப்பட்டதும், மங்களகரமானதும், ஈச்வரனை வர்ணிப்பதாயுமுள்ள இந்த ஸ்தோத்ரம் ஆரம்பம் முதல் கடைசிவரை மனோஹரமானது.

श्रीपुष्पदन्त मुखपङ्कज निर्गतेन
स्तोत्रेण किल्बिषहरेण हरप्रियेण ।
कण्ठस्थितेन पठितेन गृहस्थितेन
सुप्रीणितो भवति भूतपतिर्महेशः ।। ४० ।।

ஸ்ரீபுஷ்பதந்த முகபங்கஜ நிர்கதேந
ஸ்தோத்ரேண கில்பிஷஹரேண ஹரப்ரியேண ।
கண்டஸ்திதேந படிதேந க்ருஹஸ்திதேந
ஸுப்ரீணிதோ பவதி பூதபதிர்மஹேசः ।। 40 ।।

40. ஸ்ரீ புஷ்பதந்தரின் முகத்தாமரையினின்றும் வந்ததும் பாவங்களை அழிப்பதும்; சிவபெருமானுக்குப் பிரியமானதுமான இந்த ஸ்தோத்திரத்தை மனப்பாடம் செய்து கொண்டு துதித்தாலும், பார்த்துப் படித்தாலும், வீட்டில் வைத்துக்கொண்டிருந்தாலும் உயிர்க்கூட்டங்களுக்குத் தலைவரான பரமேச்வரர் மிகவும் ப்ரீதியை அடைகிறார்.

इत्येषा वाङ्मयी पूजा श्रीमच्छंकरपादयोः ।
अर्पिता तेन देवेशः प्रीयतां मे सदाशिवः ।। ४१ ।।

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

இத்யேஷா வாங்மயீ பூஜா ஸ்ரீமச்சங்கரபாதயோ:
அர்ப்பிதா தேந தேவேச:ப்ரீயதாம் மே ஸதாசிவ:॥41॥

41. இம்மாதிரி வாக்கினாலேயே செய்யப்பட்ட பூஜை யானது ஸ்ரீமத்சங்கரரின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்பட்டது அதனால் தேவர்களுக்கெல்லாம் ஈசனான ஸதாசிவன் என்னிடத்தில் பிரியத்தை அடையட்டும்.

तव तत्त्वं न जानामि कीदृशोऽसि महेश्वर ।
यादृशोसि महादेव तादृशाय नमो नमः ॥ १ ॥

தவதத்வம் ந ஜானாமி கீத்ருசோ(அ)ஸி மஹேச்வர ।
யாத்ருசோஸி மஹாதேவ தாத்ருசாய நமோ நம: ॥ 1 ॥

1. மஹேச்வரனே! நீர் எவ்விதமிருக்கிறீர் என்ற உமது உண்மையான தத்துவத்தை நான் அறியேன்; மஹாதேவனே! நீர் எத்தன்மையராயிருப்பினும் உமக்கு மீண்டும் மீண்டும் எனது நமஸ்காரங்கள்.

एककालं द्विकालं वा त्रिकालं यः पठेन्नरः ।
सर्वपाप विनिर्मुक्तः शिवलोके महीयते ॥ २ ॥

ஏககாலம் த்விகாலம் வா த்ரிகாலம் ய: படேந்நர: ।
ஸர்வபாப விநிர்முக்த: சிவலோகே மஹீயதே ॥ 2 ॥

2. ஒன்று, இரண்டு அல்லது மூன்று காலங்கள் இந்த ஸ்தோத்ரத்தைப் படிக்கும் மனிதன் ஸகலபாபங்களின்றும் விடுபட்டுச் சிவலோகத்தில் மிக்க பெருமைப்படுத்தப் படுவான்.

ஸ்ரீ புஷ்பதந்தர் பாடிய சிவமஹிம்னஸ் ஸ்தோத்ரம்
'சிவப்ரியை' என்ற தமிழ் பொழிப்புரையுடன் முற்றும்.

சிவம்

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,

Vaidika Pandit Sri V Hariharan Collection, Sholinganallur, Chennai

ஸ்ரீ ஞானானந்த கிரி ஸ்வாமிகளின்

அருள் மொழிகள் :

சுறுசுறுப்பாயிரு ஆனால் படபடப்பாயிராதே
பொறுமையாயிரு ஆனால் சோம்பலாயிராதே
சிக்கனமாயிரு ஆனால் கருமியாயிராதே
அன்பாயிரு ஆனால் அடிமையாயிராதே
இரக்கங்காட்டு ஆனால் ஏமாந்து போகாதே
கொடையாளியாயிரு ஆனால் ஓட்டாண்டியாய் விடாதே
வீரனாயிரு ஆனால் போக்கிரியாயிராதே
இல்லறத்தை நடத்து ஆனால் காமவெறியனாயிராதே
பற்றற்றிரு ஆனால் காட்டுக்குப் போய் விடாதே
நல்லோரை நாடு ஆனால் அல்லோரை வெறுக்காதே
உணர்ந்து ஒழுகினால் உயர்வடைவாய் !
உன் மனதிற்கு நீ அடிமையானால் உலகத்திற்கு நீ அடிமையாவாய் !
உன் மனம் உனக்கு அடங்கினால் உலகம் உனக்கு அடங்கும் !
உன்னை பிறர் நேசிக்க வேண்டுமா ? நீ பிறரை நேசி !
உன்னிடத்தில் எப்படி பிறர் நடந்து கொள்ள
விரும்புகிறாயோ, அப்படியே நீ பிறரிடத்தில் நடந்து கொள் !
மறத்தை விடு, அறத்தை நாடு, பயனடைவாய் !
நீ கடவுளை உணர வேண்டுமா ?
அன்பாயிரு, உண்மையே சொல்,
அறிவாளியாயிரு, ஆண்மையோடிரு !

CC-0.In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy,